**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 47/2023**

**நாள்: 12.11.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 14 (LW13)

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | ஜாதி | |
| தந்தை பெயர் | வேலு | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( A2 to A4 எதிரிகள் ஆஜர். A1 இறந்துவிட்டார் )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது பரமக்குடி உட்கோட்ட பார்த்திபனூர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் முதல்நிலைகாவலராக பணிபுரிந்து வந்தேன். சாட்சிகள் முத்தழகு, கோவிந்தராஜ், சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனி ஆகியோரை எனக்குத் தெரியும். அப்போது எங்கள் காவல் நிலையத்தில் திரு.சுபாஷ் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தார். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும்.

கடந்த 02.10.2012 ம் தேதி நான் பரமக்குடி நகர் காவல் நிலையத்தில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:11:42 +0530

காலை 08.00 மணியளவில் பாரா பொறுப்பை ஏற்றேன். இரவு பாராவில் இருந்த போது, 03.10.2012ம் தேதி அதிகாலை 04.05 மணிக்கு பரமக்குடி க்ரைம் SI திரு.முனியசாமி அவர்கள் காவல் நிலையத்திற்கு வந்தார். காவல் நிலையத்திற்கு வெளியில் டெம்போ கார் வந்து நின்றது. அதில் ஒரு நபரை பிடித்து வைத்திருந்தார். உள்ளே வந்த க்ரைம் SI திரு.முனியசாமி அவர்கள் உள்ளே வந்து பார்த்துவிட்டு, தண்ணீர் இல்லையா என்று கேட்டுக்கொண்டே வெளியே சென்றுவிட்டார். சிறிது நேரம் கழித்து வெளியே நின்று கொண்டிருந்த டெம்போ டிராவலரும் புறப்பட்டு சென்றுவிட்டது. காலை 06.00 மணிக்கு இரவு ரோந்து அதிகாரியான SSI திரு.பழனி அவர்கள் காவல் நிலையத்திற்கு வந்தார். பின்பு ஆய்வாளர் திரு.சுபாஷ் அவர்களும் காவல் நிலையத்திற்கு வந்தார். சிறிது நேரம் கழித்து க்ரைம் SI திரு.முனியசாமி அவர்கள், காவல் ஆய்வாளர் சுபாஷ் என்பவரிடம் புகார் மனு ஒன்றை கொடுத்தார். புகார் மனுவினை பெற்று, ஆய்வாளர் பரமக்குடி நகர் காவல் நிலைய குற்ற எண். 426/2012, பிரிவு 307 இதச வழக்காக பதிவு செய்தார். பின்பு காலை 08.00 மணிக்கு முதல் நிலை காவலர் 986 முத்தழகு என்பவர் என்னை பாராவில் இருந்து என்னை விடுவித்தார். நான் அன்று காலை 10.00 மணிக்கு ஆக்கிரமிப்பு அகற்றுவது சம்மந்தமாக பாதுகாப்பு பணிக்கு பரமக்குடி ரயில்வே நிலையத்திற்கு முன்பாக பணிக்கு சென்றேன்.

பின்பு பரமக்குடி நகர் காவல் நிலைய வழக்கின் சம்மந்தப்பட்ட சந்தேக நபரான வெங்கடேஷன் என்பவரை எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் வைத்து, விசாரணை நடத்தியதில் உடல்நிலை மோசமான நிலையில் இருந்ததால், பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்ததாகவும், மருத்துவர் அவரை பரிசோதனை செய்ததில், அவர் இறந்துபோய்விட்டதாகவும், இறந்த நபர் சம்மந்தமாக பரமக்குடி நகர் காவல்நிலைய குற்ற எண். 427/2012, பிரிவு 176 Cr.P.C., வழக்கு பதிவு செய்யப்பட்டு, விரைவு முதல் தகவல்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:11:45 +0530

அறிக்கையை என்னிடம் ஒப்படைக்கப்பட்டு, உத்தரவுப்படி பரமக்குடி நீதித்துறை நடுவர் அவர்களிடம் சமர்ப்பித்தேன். வெங்கடேசன் இறந்தது சம்மந்தமாக பரமக்குடி நீதித்துறை நடுவர் அவர்கள் என்னை விசாரித்தார். எனது நோட்புக்கான பாக்கெட் டைரியை பரமக்குடி நீதித்துறை நடுவர் அவர்கள் பெற்றுக்கொண்டார். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் **பாக்கெட் டைரி** என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.7** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு பரமக்குடி நகர் காவல் நிலைய திருட்டு வழக்கில் சம்மந்தப்பட்ட வெங்கடேசன் என்பவரை பரமக்குடி குற்றப்பிரிவு போலிசார், எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தியதில் வெங்கடேசன் இறந்ததாக கேள்விப்பட்டேன். இவ்வழக்கானது இராமநாதபுரம் CBCID க்கு மாற்றப்பட்டதாக தெரிந்து கொண்டேன். CBCID ஆய்வாளர் என்னை 24.03.2018 ம் தேதி என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

03.10.2012 ம் தேதி GD பொறுப்பு என்னிடம்தான் இருந்தது என்றால் சரிதான். 03.10.2012 ம் தேதி காலை ஆய்வாளர் சுபாஷ் GD யில் குறித்தாரா என்றால் எனக்குத் தெரியாது. என்னை பரமக்குடி நீதித்துறை நடுவர் விசாரித்த போது, 03.10.2012 ம் தேதி காலை 06.00 மணிக்கு நான் பணியில் இருந்த போது, காவல் ஆய்வாளர் சுபாஷ் அவர்கள் நிலையம் வந்து, என்னிடம் பொதுநாட்குறிப்பேடு பதிவேடு வாங்கி எழுதினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் பரமக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு விரைவு முதல் தகவல் அறிக்கையை ஒப்படைக்க எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் மாலை 05.00 மணிக்கு சென்றேன். காவல் நிலையத்திற்கும், பரமக்குடி நீதித்துறை



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:11:47 +0530

நடுவர் நீதிமன்றத்திற்கும் 100 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் கொண்டு சென்ற முதல் தகவல் அறிக்கையானது பரமக்குடி நீதித்துறை நடுவரால் 03.10.2012ம் தேதி இரவு 09.00 மணிக்கு பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனது பாக்கெட் டைரியில் 03.10.2012ம் தேதி 05.00 மணிக்கு விரைவு தபாலை வாங்கிச்சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 03.10.2012ம் தேதி எனது பணி முடித்த பின்பு எனது பாக்கெட் டைரியில் ஆய்வாளரிடமோ, சார்பு ஆய்வாளரிடமோ கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான்.

இறந்துபோன வெங்கடேசன் மீது பல குற்ற வழக்குகள் உள்ள விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். 03.10.2012ம் தேதி ஆக்கிரப்பு பணி முடித்துவிட்டு பிற்பகல் சுமார் 03.00 மணிக்கு பரமக்குடி நகர் காவல் நிலையத்திற்கு வந்துவிட்டேன்.

நான் எனது முதன்மை விசாரணையில் சொன்ன விவரங்கள், உயர்அதிகாரிகள் சொல்லிக்கொடுத்ததன் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:11:49 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .